# சக்கர வியூகம்

தினசரி புலனாய்வு நாளிதழ்

SAKKRA VIYUGAM

www.sakkraviyugam.com TNTAM/25/A1018 sakkraviyugam2025@gmail.com

VOLUME : 01 ISSUE: 192 05.1.2026 MONDAY MARGAZHI : 21 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 192 05.1.2026 திங்கள்கிழமை மார்கழி : 21 விலை : ரூ.5/-



3 டெல்லியில் புத்தர் நினைவு கண்காட்சி: பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்

4 பொங்கல் தொகுப்பு நிதியாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.5,000 வழங்க வேண்டும் : புதுச்சேரி அதிமுக

2 'லயோலா' வெளியிட்டது கருத்துக் கணிப்பு அல்ல; கருத்து திணிப்பு : பாஜக விமர்சனம்


# "பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜன.5-

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3,000 ரொக்கப் பணம் வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "இயற்கையின் முதன்மை வடிவாய் அமைந்த சூரியனுக்கும் உழவர்களின் உழைப்பிற்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளுக்கும் உலக மக்களுக்கு உணவளித்துப் பசி பிணி போக்கும் விவசாயிகளுக்கும் நன்றி கூறி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களால் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்படும் பாரம்பரிய உன்னத விழா பொங்கல் திருநாள் ஆகும்.



பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கிட முதல்வர் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இதன்மூலம் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவர். மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள வேட்டி சேலைகள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொங்கல் விழாவை மேலும் சிறப்பாக கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் பொங்கல் ரொக்கப் பரிசாக ரூ.3000 வழங்கிட முதல்வர் ஆணையிட்டுள்ளார். பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கப் பரிசு மொத்தம் ரூ.6936,17,47,959 செலவில் வழங்கப்படும்.

பொங்கல் திருநாளுக்கு முன்பாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கிட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



■ மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் திருப்பூர் மாவட்டம், ருத்ராவதி பேரூராட்சி. முத்தனம்பட்டி தொடக்கப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் 2026 சிறப்பு முகாம்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஃபெலிக்ஸ்ராஜா அவர்கள் உள்ளார்.

## தமிழக முதல்வருக்கு நில அளவை கணிக வரவையாளர் சங்கம் நன்றி அறிவிப்பு

அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தினை வழங்க கோரி தமிழக முதல்வர் மற்றும் தலைமைச் செயலாளரிடம் பல்வேறு கோரிக்கை மனுக்கள் வழங்கினோம். அதனை தாயுள்ளத்துடன் ஏற்றுக் கொண்ட முதல்வர் ஐயா மு.க.ஸ்டாலின் அவர்கள் பழைய ஓய்வு திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்று கூறி அரசு சார்பில், அறிவிப்பு வெளியிட்டது. தமிழ்நாடு



நில அளவை கணிக வரைவாளர் ஒன்றிப்பு முதன்மை வரையாளர் தவமணி தெரிவித்துள்ளது : அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா ஸ்டாலின் அவர்களுக்கு எங்களின் சார்பிலும் அனைத்து அரசு ஊழியர்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறியுள்ளார்.

## எங்களுக்கு பென்ஷன் கிடையாதா?



தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் குறித்த அறிவிப்பில் ஊரக வளர்ச்சித்துறையில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்கள் பணியாளர்களை பென்ஷன் திட்டத்தில் இணைக்க வேண்டும் என்பது குறித்த விரிவான தகவல்கள் இல்லாதது வேதனை அளிக்கிறது என்று ஊராட்சி செயலாளர்கள் சங்க மாநில தலைவர் ஜான்போஸ்கோ பிரகாஷ் தெரிவித்துள்ளார்.





விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000


## தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் மகேந்திரகுமார் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி கூறி அறிக்கை

சென்னை, ஜன.5-

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான, 'தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கான' அறிவிப்பை வெளியிட்டு, லட்சக்கணக்கான அரசு ஊழியர்களின்

23 ஆண்டு கால கனவை நனவாக்கிய, நல்லாட்சி நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, அனைத்து அரசு அலுவலர்கள், மற்றும் அவர்களது குடும்பத்தினர்கள் சார்பாக கோடான கோடி நன்றிகளைதெரிவித்துக் கொள்கிறோம் என தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியத்தின் மாநில தலைவர் வெ.மகேந்திரகுமார் அறிக்கை வெளியிட்டுள்ளார்.




## தமிழ்நாடு முதல்வருக்கு கல்வித்துறை அலுவலகபணியாளர் சங்கம் நன்றி அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களிடம் கல்வித்துறை மற்றும் அரசு ஊழியர் சங்கம் சார்பில், பல்வேறு கோரிக்கை மனுக்கள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு கல்வித்துறை அலுவலக பணியாளர் சங்க மாநில மையம் மாநில இணை செயலாளர் சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளது : திராவிட மாடல் அரசு அரசு



ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது அந்த வகையில் கோரிக்கை வைத்த அடுத்த கனமே அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தினை அறிவித்து மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. இந்த திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் ஐயா அவர்களுக்கு எங்களின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சர் பணி அலுவலர் சங்க மாநிலத் தலைவர் ரவிக்குமார் நன்றி

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இலட்சோப லட்ச அரசு ஊழியர்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் பழைய ஓய்வூதிய திட்டத்தினை அறிவிக்க கோரி முதல்வர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை தொடர்ந்து வழங்கி வந்தனர் அதனை ஏற்று பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு அறிவிப்பு வெளியிட்டது இதனை வரவேற்கும் விதமாக தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப் பணி அலுவலர் சங்க மாநில தலைவர் ரவிக்குமார் தமிழக முதல்வருக்கும் தமிழக அரசுக்கும் நெஞ்சார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.



## தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியம் மதுரை மாவட்ட தலைவர் இளங்கோ தமிழக முதல்வருக்கு நன்றி

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களை பல்வேறு அரசு அலுவலர் சங்கங்கள் நேரில் பார்த்து பழைய ஓய்வூதிய திட்டம் அறிவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர். இதனை ஏற்று 03.01.26அன்று பழைய ஓய்வூதிய திட்டம் நடைமுறைப்


படுத்தப்படும் என்று அரசு அறிக்கை வெளியிட்டது. அதனை வரவேற்கும் விதமாக தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியம் மதுரை மாவட்ட தலைவர் இளங்கோ தெரிவித்துள்ளது. அனைவரையும் அரவணைத்து செல்லும் தமிழக முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் ஐயா அவர்கள் அரசு ஊழியர்களையும் தன்னுடன் பிறந்த சகோதரர் போல் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். அவருக்கு எனது சார்பிலும், அனைத்து அரசு ஊழியர்கள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்தார்



# ‘போதையில் இருந்து மாணவர்களை காப்பாற்றும் பொறுப்பு அரசுக்கும் உண்டு

சிவகங்கை, ஜன.5-

ஜன.4: தமிழகத்தில் உள்ள மத்திய அரசு பள்ளிகளுக்கு முன் போதை வஸ்துகள் விற்கும் நிலை உள்ளது. பிள்ளைகளை போதைப் பழக்கத்தில் இருந்து காப்பதற்கு பெற்றோருக்கு கடமை இருப்பது போல் அரசுக்கும் கடமை உள்ளது என பா.ஜ., தேசிய செயற்குழு உறுப்பினர் எச்.ராஜா தெரிவித்தார்.



சிவகங்கையில் அவர் கூறியதாவது: சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் நடந்த வைகுண்ட ஏகாதசி விழாவில் முன்னாள் கவர்னர் தமிழிசையை நீ வா போ என்று பேசியது என்ன நாகரிகம். இரண்டு மாநிலங்களுக்கு ஆளுநராக இருந்தவர் தமிழிசை. அரசியல் பாரம்பரியம் உள்ளவர். நேற்றைய தினம் சுசீந்திரத்தில் பாரத் மாதா கி ஜே என்று கோஷம் போட்டவுடன் ஏன் அமைச்சர் சேகர்பாவிற்கு கோபம் வருகிறது. சேகர்பாபுவின் நடவடிக்கை ஹிந்து விரோதமாக உள்ளது.

பழநி முருகன் கோவிலில் முருகன் மாநாடு நடத்தியதற்கு கணக்கு கொடுக்கவில்லை. உயர் நீதிமன்றமே 76 கோயில்களுக்கு கணக்கு கொடுக்கவில்லை என்று கூறி கணக்கு உடனே கொடுக்கக் கூறியுள்ளது.

போதையில் குழந்தைகள் ஆட்படாமல் பெற்றோர் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று முதல்வர் கூறியுள்ளார். ஆனால் அப்பாவான நீங்கள் டாஸ்மாக் கடையை திறந்து வைத்துள்ளீர்கள். கவர்னர் சங்கரன்கோவிலில் போதை ஒழிப்பு மாநாட்டில் கேட்ட கேள்விக்கு இன்று வரை முதல்வரிடமிருந்து பதில் வரவில்லை. தமிழகத்தில் உள்ள மத்திய அரசு பள்ளிகளுக்கு முன் போதை வஸ்துகள் விற்கும் நிலை உள்ளது. பிள்ளைகளை போதைப் பழக்கத்தில் இருந்து காப்பதற்கு பெற்றோருக்கு கடமை இருப்பது போல் அரசுக்கும் கடமை உள்ளது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பற்றி பேச ஒன்றுமே இல்லை. திருத்தணியில் போதையில் பட்டாகத்தி வைத்துக் கொண்டு இளைஞர்கள் ஒடிசா மாநில இளைஞரை தாக்குகின்றனர். மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஒருவர் கோயம்புத்தூரில் கொலை செய்யப்படுகிறார். அவசரமாக 24 மணி நேரத்தில் எவ்வாறு பிரேத பரிசோதனை செய்தார்கள். சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் இரண்டு புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். 2026ல் தி.மு.க., அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள் என்றார்.




# திருச்சூர் ரயில் நிலையத்தில் பற்றியது தீ: 600 இருசக்கர வாகனங்கள் சேதம்

திருவனந்தபுரம், ஜன.5-

கேரளா, திருச்சூர் ரயில் நிலையத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. 600 இரு சக்கர வாகனங்கள் தீயில் எரிந்து சேதம் அடைந்தன.

கேரள மாநிலம் திருச்சூர் ரயில்வே ஸ்டேஷனில் காலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

அங்கு இரண்டாவது கேட் அருகே உள்ள டூவீலர் பார்க்கிங் பகுதியில் தீ பிடித்துள்ளது.

முதலில் இரண்டு டூவீலர்களில் ஆரம்பமான தீ, பின்னர் பார்க்கிங் முழுவதும் பரவியது.

இதில் 600க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள் எரிந்து நாசமானது.

தொடர்ந்து பார்க்கிங் பகுதியை ஒட்டி இருந்த டிக்கெட் கவுன்டர் அறைக்கும் தீ பரவியது.

பரபரப்பான காலை நேரத்தில் இந்த விபத்து நடந்ததால் மக்கள் பீதியில் உறைந்தனர். பல மணி நேர போராட்டத்துக்கு பின் தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்த பயங்கர தீ விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிர்சேதம் ஏற்படவில்லை. ஆனால் 600 டூவீலர்கள், பிளாட்பார்ம் கூரை, டிக்கெட் கவுன்டர் அறை முற்றிலுமாக நாசமானது. சோதனை ஓட்டத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் என்ஜின் பாதி எரிந்த நிலையில் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. விபத்துக்கான காரணம் குறித்து ரயில்வே போலீசார் விசாரிக்கின்றனர்.



# மரபணு மாற்றம் மூலம் முள் இல்லாத மீன்: சீன விஞ்ஞானிகள் அசத்தல்

பெய்ஜிங், ஜன.5-

மீன் சாப்பிடுவதில் இருக்கும் மிகப் பெரிய பிரச்சினை அதில் இருக்கும் முள்தான். அதனால் மீனை சாப்பிடும் போது அதிக கவனம் தேவைப்படும். இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மரமணு மாற்றம் மூலம் முள் இல்லாத மீன் வகையை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

‘கிபல் கார்ப்’ என்ற நன்னீர் மீன் வகையை சீன விஞ்ஞானிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டனர். இதில் வழக்கமாக ஆங்கில எழுத்து ‘ஒய்’ வடிவில் 80 சிறிய முள்கள் இருக்கும். இந்த முள் உருவாக்கத்துக்கு ‘ரன்எக்ஸ்2பி’ என்ற மரபணுதான் காரணம் என கண்டறியப்பட்டது.

சிஆர்ஐஎஸ்பிஆர், சிஏஎஸ் என்ற மூலக்கூறு கத்தரி மூலம் முள் வளர்ச்சிக்கு காரணமான இந்த மரபணு நீக்கப்பட்டது. அதன்பின் ‘கிபல் கார்ப்’ மீன் குஞ்சுகளை உருவாக்கியபோது, முற்றிலும் முள் இல்லாத மீன் உருவானது. இந்த மரபணு

மாற்றம் மூலம் மீனின் இயல்பான வளர்ச்சியில் எந்த மாற்றமும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த மீன் தற்போது சீனாவில் பிரபலமடைந்துள்ளது. இது குறித்த ஆய்வறிக்கை மீன்வளர்ப்பு இதழ் ஒன்றில் வெளியாகியுள்ளது.

சீன அறிவியல் அகாடமி விஞ்ஞானிகள் ‘ஜோங்கே எண்.6’ என்ற மீன் வகையிலும் மரபணு மாற்றம் செய்து முள் இல்லாத மீனாக உருவாக்கி யுள்ளனர். இவற்றில் இருந்த சிஜிரன்எக்2பிஏ மற்றும் பி மரபணுதான் முள் வளர்ச்சிக்கு காரணம் என கண்டறியப்பட்டு அதில் மாற்றம் செய்யப்பட்டது.

# ‘லயோலா’ வெளியிட்டது கருத்துக் கணிப்பு அல்ல; கருத்து திணிப்பு : பாஜக விமர்சனம்

சென்னை, ஜன.5-

"தமிழகத்தில் திமுகவை வீழ்த்தி அதிமுக,பாஜக தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியை அமித் ஷா அமைப்பார்" என தமிழக பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் தெரிவித்துள்ளார்.




இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக மீண்டும் வெற்றி பெறும், மு.க. ஸ்டாலின் தான் மீண்டும் முதல்வராக பொறுப்பேற்பார் என்றும் முதல்வர் வேட்பாளருக்கான கருத்துக் கணிப்பில் எடப்பாடி பழனிசாமியை பின்னுக்குத் தள்ளி விஜய் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார் என்றும் மிஷனரி அரசியல் செய்யும் லயோலா கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் நடத்திய கருத்து திணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இந்த கருத்துக் திணிப்பில் 81.71 சதவிகிதம் பேர் இந்துக்கள் என்றும், 10.55 சதவிகிதம் பேர் கிறிஸ்தவர்கள் என்றும், 7.75 சதவிகிதம் பேர் இஸ்லாமியர்கள் என்றும் மதவெறி அரசியலை திணித்து மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் மத ரீதியான, பிரிவினைவாத அடிப்படையில் அந்த மிஷனரி நிறுவனம் கருத்துருவாக்கத்தை உருவாக்கியது சட்டவிரோதமானது.

தமிழகத்தில் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவை வீழ்த்தி தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். சனாதன தர்ம எதிர்ப்பு, இந்து விரோத அரசியல் நடத்தி சிறுபான்மை ஓட்டுக்களை பங்கு போடுவதில் திமுகவிற்கும் தமிழக வெற்றி கழகத்திற்கும் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இந்து தர்மத்தை சிதைக்கும் வகையில் தமிழ் கடவுளை கொச்சைப்படுத்தும் வகையில், பாசிச அரசியல் செய்யும் அரசியல் கட்சிகளை தமிழக மக்கள் விரட்டியடிப்பார்கள்.

தமிழகத்தில் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவை வீழ்த்தி தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். விலைவாசி உயர்வு, கொலை கொள்ளை, போதை கலாச்சாரம், கொடுங்கோல் அவுரங்கசீப் ஆட்சி அரசியலுக்கு முடிவு கட்டும் வகையில் அரசியல் சாணக்கியர் அமித்ஷா மக்கள் விரோத தீய சக்தி திமுகவின் ஆட்சிக்கு இன்று புதுக்கோட்டையில் முழுமையான முடிவுரையை எழுத இருக்கிறார்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு ஏற்றவாறு, தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு திருச்சியில் நடைபெறும் மோடி பொங்கல் நிகழ்ச்சியில் அமித்ஷா நாளை பங்கேற்கிறார். சனாதன தர்மத்திற்கு எதிராக நடந்த பல போர்களை வேரோடு வீழ்த்தி இந்து சமுதாயத்தை, தமிழ்நாட்டை காப்பாற்றி அருளிய திருச்சி ஸ்ரீ ரங்கநாதரை தரிசிக்கும் அமித் ஷா டெல்லி சென்று விட்டு அடுத்தது தமிழகம் திரும்பும் பொழுது, தேசிய ஜனநாயகக் கூட்டணி மேலும் பல முக்கிய கட்சிகளோடு மிகப்பெரும் வலிமையோடு கூட்டணி அமைத்திருக்கும்.

கடந்த 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், ஜெயலலிதா தலைமையிலான அதிமுகவை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக, வெறும் 2 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. இது அந்த கட்சியின் வரலாற்றிலேயே மிகக் குறைந்த எண்ணிக்கையிலான இடங்களைக் கைப்பற்றிய தேர்தலாகும்.

அதே சூழ்நிலையை வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக சந்திக்கும் வகையில் அமித் ஷாவின் தேர்தல் வியூகம் இருக்கும். திமுகவின் ஊழல் பண பல அரசியல், நடிகர் விஜய்யின் லாட்டரி அரசியல், செபாஸ்டின் சைமனின் பிரிவினைவாத அரசியல், திருமாவளவனின் பட்டியலின விரோத திருட்டு திராவிட அரசியல் என அனைத்து மக்கள் விரோத அரசியல் கட்சிகளின் பொய் முகமூடிகளின் சாயம் வெளுக்கும்.

மிஷனரி அரசியல் அமைப்புகளின் கருத்துக் கணிப்புகளையும் கருத்து திணிப்புகளையும் மாற்றி, தேசிய ஜனநாயக கூட்டணியை மகத்தான வெற்றி பெற செய்து அரசியல் சாணக்கியர் அமித் ஷா தமிழகத்தில் சரித்திரம் படைப்பார்" என்று தெரிவித்துள்ளார்.



# லஞ்ச வழக்கில் ஐ.ஏ.எஸ்., கைது

ஆமதாபாத், ஜன.5-

குஜராத் மாநிலம், சுரேந்திரநகர் கலெக்டராக இருந்தவர் ராஜேந்திர குமார் படேல். இவரது அலுவலகத்தில் அதிகாரியாக பணியாற்றுபவர் சந்திர சிங் மோரி. இவர் வருவாய்த் துறை துணை அதிகாரியாக பணியாற்றியபோது, சவுராஷ்டிரா குடியேற்ற குத்தகைத் தீர்வு சட்டத்தின்படி, பொதுமக்கள் பெயருக்கு நிலத்தை மாற்றும் பணிக்கான விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அப்போது, விண்ணப்பங்களுக்கு விரைவில் அனுமதி வழங்க விண்ணப்பதாரர்களிடம் மோரி லஞ்சம் பெற்றுள்ளார். இது தொடர்பாக பணமோசடி வழக்குப்பதிவு செய்த அமலாக்கத்துறை அதிகாரிகள், மோரி மற்றும் சிலரை கைது செய்தனர்.

லஞ்சம் பெற்ற வழக்கில் தொடர்பிருப்பதாக கூறி, சுரேந்திர நகர் கலெக்டர் ராஜேந்திரகுமார் படேலை, ஒரு வாரத்துக்கு முன் எந்த பதவியும் வழங்காமல் காத்திருப்போர் பட்டியலுக்கு மாநில அரசு மாற்றியது. இந்நிலையில், லஞ்சம்பெற்றதில் தொடர்புடையதாக பணமோசடி வழக்குப்பதிவு செய்த அமலாக்கத்துறை, படேலை கைது செய்தது.

முன்னதாக அமலாக்கத் துறையினர் அளித்த புகாரின்படி, குஜராத் லஞ்ச ஒழிப்பு போலீசாரும் படேல் மற்றும் மூவர் மீது பணமோசடி வழக்கு பதிவு செய்துள்ளனர்.

# கருத்து வேறுபாடு ஜனநாயகத்தின் அடிப்படை; துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் பேச்சு

சென்னை, ஜன.5-

''பல்வேறு விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் இருக்க வேண்டியது, ஜனநாயகத்தின் அடிப்படை. கருத்து வேறுபாடுகள் இல்லையென்றால், ஜனநாயகமே இருக்காது,'' என துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னை, கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில், துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணனை கவுரவிக்கும் விழா நடந்தது. இதில், அவர் பேசியதாவது: பல்வேறு விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் இருக்க வேண்டியது, ஜனநாயகத்தின் அடிப்படை. கருத்து வேறுபாடுகள் இல்லையென்றால், ஜனநாயகமே இருக்காது. கருத்து வேறுபாடுகள் அவசியம். ஆனால், அவை கட்டுப்பாடாகவும், சமூக நலனை முன்னிறுத்தியும் இருக்க வேண்டும். எதிர்ப்பு என்பதற்காகவே எதிர்ப்பது சரியான வழிமுறை அல்ல.


நம் அணுகுமுறை எப்போதும் நேர்மையானதாகவும், சமூகத்திற்கு பயன் தருவதாகவும் இருக்க வேண்டும். நம் கருத்துக்களை வெளிப்படுத்துவதுடன், பிறரின் கருத்துக்களையும், பொறுமையுடன் கேட்க வேண்டும். இறுதியாக ஒரு முடிவு எடுக்கப்பட்டால், அதை ஏற்று நடைமுறைப்படுத்த, அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். குழு மனப்பான்மை, அணி மனப்பான்மை என, இரண்டு விதமான மனப்பான்மைகள் உள்ளன. இரண்டிற்கும் இடையிலான வேறுபாடு சிறியது; ஆனால் அதன் தாக்கம் மிகப்பெரியது.

குழு மனப்பான்மை, சில தனிநபர்களின் ஆசைகளுக்கே சேவை செய்யும். ஆனால், அணி மனப்பான்மை, தனிநபர் பங்களிப்புகளை அங்கீகரித்தபடியே, சமூகத்தின் மொத்த நலனுக்காக செயல்படும். பதவியும், பணமும் அதிகரிக்கும்போது, பணிவும் அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்விழாவில் கவர்னர் ரவி, மத்திய அமைச்சர் முருகன், தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, அ.தி.மு.க., பொதுச் செயலர் பழனிசாமி, தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன், இசையமைப்பாளர் இளையராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வெனிசுலா இடைக்கால அதிபராக பொறுப்பேற்க துணை அதிபருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

கராகஸ், ஜன.5-

வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டு அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்கை இடைக்கால அதிபராக பொறுப்பேற்க அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ போதைப்பொருள் கடத்தலுக்கு தலைமை தாங்குவதாகவும், அங்கிருந்து அமெரிக்காவுக்கு போதைப் பொருள் ஏராளமாக நுழைவதாகவும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பகிரங்கமாக குற்றம் சாட்டினார். வெனிசுலாவுக்கு பொருளாதார தடை விதித்தார்.

மேலும், போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க, கடந்த ஆகஸ்ட் மாதம் முதலே கரீபியன் கடற்பகுதியில் அமெரிக்க கடற்படை கப்பல்கள் ரோந்து பணியில் தீவிரமாக ஈடுபட்டன. போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட முயன்றதாக சில படகுகள் மீது அமெரிக்க கடற்படை தாக்குதல் நடத்தியது. இந்த சூழ்நிலையில், வெனிசுலா தலைநகர் கராகஸில் நேற்று அதிகாலை (உள்ளூர் நேரப்படி அதிகாலை 2 மணி) அடுத்தடுத்து பயங்கர வெடிச் சத்தம் கேட்டது. விமானங்கள் தாழ்வாக பறந்து சென்றன. இது தொடர்பான வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாயின. அதில் பல கட்டிடங்கள் தீப்பிடித்து எரிந்தன. நகரின் பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்தனர்.

இதுகுறித்து அதிபர் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலை தளத்தில் வெளியிட்ட பதிவில், “வெனிசுலா மற்றும் அதன் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக ஒரு பெரிய அளவிலான தாக்குதலை அமெரிக்கா வெற்றிகரமாக நடத்தியுள்ளது. நிக்கோலஸ் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் சிறைபிடிக்கப்பட்டு, நாட்டுக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை அமெரிக்க சட்டஅமலாக்கத் துறையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்த கூடுதல் விவரங்கள் விரைவில் வெளியாகும்" என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து, நிக்கோலஸ், அவரது மனைவி இருவரும் நியூயார்க் நகருக்கு அமெரிக்க போர்க்கப்பலில் அழைத்து வரப்பட்டுள்ளனர். வெனிசுலாவை அமெரிக்கா தற்காலிகமாக ஆட்சி செய்யும். அதன் பரந்த எண்ணெய் வளங்கள் மற்ற நாடுகளுக்கு விற்பனை செய்ய பயன்படுத்தப்படும் என்று டொனால்ட் ட்ரம்ப் கூறினார். நிகோலஸ் மதுரோ மீதும் அவரது மனைவி மீதும் போதைப்பொருள் பயங்கரவாத சதி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், தொலைக்காட்சியில் உரையாற்றிய வெனிசுலா துணை அதிபர் டெல்சி ரோட்ரிக், நிகோலஸ் மதுரோதான் நாட்டின் அதிபர். அவர்தான் நாட்டின் ஒரே அதிபர். அவரை அமெரிக்க உடனடியாக விடுவிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிலையில், நாட்டின் இடைக்கால அதிபராக பொறுப்பேற்குமாறு துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்க்கு வெனிசுலா உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ரஷ்யா, சீனா கண்டனம்: அமெரிக்காவின் இந்த செயல் ஒரு நாட்டின் இறையாண்மையை மீறும் வகையில் இருப்பதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. சீனாவும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான உண்மை நிலவரத்தை உடனடியாக தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளது. இதுபோல, சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்குமாறும், நிதானத்தை கடைபிடிக்குமாறும் ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவை வலியுறுத்தி உள்ளது.

# மகாராஷ்டிராவில் சாலை வசதி இல்லாததால் 6 கி.மீ. நடந்து சென்ற கர்ப்பிணி உயிரிழப்பு

கட்சிரோலி, ஜன.5-

மகாராஷ்டிர மாநிலம் கட்சிரோலி மாவட்டம் ஆல்டண்டி டோலா கிராமத்தைச் சேர்ந்த ஆஷா சந்தோஷ் கிரங்கா (24) 9 மாத கர்ப்பிணியாக இருந்தார். அவரது கிராமத்துக்கு சாலை வசதி இல்லை. அதேநேரம், அங்கு மருத்துவ வசதிகளும் இல்லை.

இந்நிலையில், பிரசவ வலிக்கு முன்பே சாலை வசி உள்ள பெத்தா என்ற ஊரில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு செல்ல முடிவு செய்தார். அதற்காக அந்தப் பெண் ஜனவரி 1ஆம் தேதி தனது கணவருடன் காடுகளின் வழியாக 6 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்றுள்ளார்.



ஜனவரி 2ஆம் தேதி காலையில் அவருக்குக் கடுமையான பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. அவர் ஆம்புலன்ஸ் மூலம் ஹெத்ரியில் உள்ள காளி அம்மாள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் செய்ய முடிவு செய்தனர். எனினும், அவரை பரிசோதித்த மருத்துவர்கள், காலம் கடந்துவிட்டதாகவும் குழந்தை ஏற்கெனவே கருப்பையிலேயே இறந்துவிட்டதாகவும் தெரிவித்தனர்.

மேலும் ரத்த அழுத்தம் அதிகரித்ததால், அந்தப் பெண்ணும் சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்து கட்சிரோலி மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் பிரதாப் ஷிண்டே கூறும்போது, "அந்தப் பெண் ஆஷா பணியாளர்கள் மூலம் பதிவு செய்யப்பட்டவர். திடீர் பிரசவ வலியும் சிக்கல்களும் அவர் நடந்ததன் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். மருத்துவர்கள் அவரைக் காப்பாற்ற முயன்றனர், ஆனால் அது பலனளிக்கவில்லை. சுகாதார அதிகாரியிடமிருந்து விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளது, இது குறித்து விசாரணை நடத்தப்படும்" என்றார்.

# டெல்லியில் புத்தர் நினைவு கண்காட்சி: பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்

புதுடெல்லி, ஜன.5-

டெல்லியில் நேற்று புத்தர் நினைவு கண்காட்சியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

'ஒளி மற்றும் தாமரை: விழிப்புற்றவரின் நினைவுச் சின்னங்கள்' என்ற பெயரில் புத்தருடன் தொடர்புடைய புனித நினைவுச் சின்னங்களின் பிரம்மாண்ட சர்வதேச கண்காட்சி டெல்லியில் உள்ள ராய் பித்தோரா கலாச்சார வளாகத்தில் நேற்று தொடங்கியது. இந்த கண்காட்சியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:



அடிமைத்தன காலத்தின்போது இந்தியாவில் இருந்து புத்தரின் நினைவுச் சின்னங்கள் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை ஏலம் விடப்பட்டன. இதை மத்திய அரசு தடுத்து நிறுத்தியது. சில நிறுவனங்களின் உதவியால் சுமார் 125 ஆண்டுகளுக்குப் பிறகு புத்தரின் நினைவுச் சின்னங்கள் மீட்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளன.

கடந்த சில மாதங்களில் தாய்லாந்து, வியட்நாம், மங்கோலியா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் புத்தரின் நினைவுச் சின்னங்களின் கண்காட்சி நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். பகவான் புத்தர் எல்லோருக்கும் சொந்தமானவர். அவர் ஒட்டுமொத்த உலகத்தையும் இணைக்கிறார்.

எனது வாழ்க்கைக்கும் பகவான் புத்தருக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. எனது சொந்த ஊரான வட்நகர், புத்த மத போதனைகளின் மிக முக்கிய மையமாக விளங்கியது. தற்போது நான் வாராணசி எம்பியாக உள்ளேன். எனது தொகுதியில் உள்ள சாரநாத்தில் புத்தர் தனது முதல் போதனையை தொடங்கினார்.

பிரதமர் என்ற வகையில் சீனா, ஜப்பான், மங்கோலியா, இலங்கை, சிங்கப்பூரில் உள்ள புத்த மதத் தலங்களை பார்வையிடும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் சீனா, ஜப்பான், கொரியா, மங்கோலியாவுக்கு செல்லும் போதெல்லாம் போதி மரக் கன்றுகளையும் எடுத்துச் செல்கிறேன்.

மத்திய அரசு சார்பில் நாடு முழுவதும் உள்ள புத்த வழிபாட்டு தலங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. காஷ்மீரின் பாரமுல்லாவில் சுமார் 2,500 ஆண்டுகள் பழைமையான புத்த வழிபாட்டுத் தலம் சில மாதங்களுக்கு முன்பு கண்டறியப்பட்டது. அதை பாதுகாத்து, மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. புத்தர் பாலி மொழியில் போதனை செய்தார். அந்த மொழிக்கு, செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது. புத்தரின் போதனைகளை இந்தியா பின்பற்றுகிறது. இதன் காரணமாகவே இது போருக்கான காலம் இல்லை என்று கூறி வருகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

# தினமும் வேலைக்கு செல்லும் முன் சிறுவனை சங்கிலியால் கட்டிவைத்த பெற்றோர்

நாக்பூர், ஜன.5-

தினக்கூலி வேலைக்கு செல்லும் பெற்றோர் தங்களின் 12 வயது மகனை, செல்போன் திருடன் என்ற குற்றச்சாட்டின் பேரில், கடந்த இரண்டு மாதங்களாக தினமும் பல மணி நேரம் சங்கிலியால் கட்டிப் பூட்டி வைத்துச் சென்றுள்ளனர்.

இந்த அதிர்ச்சிகர சம்பவம் மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் நடந்துள்ளது. தகவலின் பேரில் காவல்துறை மற்றும் மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் அந்தச் சிறுவனை மீட்டு அரசு குழந்தைகள் காப்பகத்தில் சேர்த்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகையில், "மீட்புக் குழுவினர் சென்றபோது அச்சிறுவன் ஒரு வாளியின் மீது நின்றுகொண்டிருந்தான். அவனது பெற்றோர் தினமும் காலை 9 மணிக்கு வேலைக்குச் செல்லும் முன் அவனை கட்டி வைத்துவிடுவார்கள். இவ்வாறு கட்டியதால் 2 முதல் 3 மாதங்கள் பழமையான காயங்கள் சிறுவனுக்கு உள்ளன.



அந்தச் சிறுவனுக்கு நடத்தை சார்ந்த பிரச்சினைகள் உள்ளன. அவனது தவறான செயல்களால், குறிப்பாக திருட்டுப் பழக்கத்தால் பெற்றோர் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியிருந்தனர்" என்று தெரிவித்தன.






# தெலங்கானா டிஜிபி முன்னிலையில் நக்சலைட்கள் 20 பேர் சரண்

ஹைதராபாத், ஜன.5-

தெலங்கானாவில் மாநில காவல்துறை இயக்குநர் சிவதர் ரெட்டி முன்னிலையில் 20 நக்சலைட்கள் ஆயுதங்களுடன் சரண் அடைந்தனர்.

தெலங்கானாவில் நக்சலைட்களின் கொரில்லா படை தலைவராக செயல்பட்டு வந்த தேவா, கமாண்டர் படை செயலாளர் ராஜா ரெட்டி, இவரது மனைவி உள்ளிட்ட 20 நக்சலைட்கள் ஆயுதங்கள் மற்றும் ரூ.20 லட்சம் ரொக்கப் பணத்துடன் தெலங்கானா மாநில காவல்துறை இயக்குநர் சிவதர் ரெட்டி முன்னிலையில் சரண் அடைந்தனர். அப்போது வெடிகுண்டுகள், பல்வேறு வகை துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை ஒப்படைத்தனர்.

இதுகுறித்து டிஜிபி சிவதர் ரெட்டி கூறியதாவது: பிஎல்ஜிஏ நக்சலைட்கள் குழுவில் 400 பேர் இருந்தனர். தற்போது 66 பேர் மட்டுமே உள்ளனர். மற்றவர்களில் பலர் உயிரிழந்தனர். மேலும் பலர் சரண் அடைந்துள்ளனர்.

முதல்வர் ரேவந்த் ரெட்டியின் உத்தரவின் பேரில், சரண் அடைந்த நக்சலைட்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படுகிறது. நக்சலைட்கள் அனைவரும் தங்களை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இந்த இயக்கம் தேவைதானா என்பதை அவர்கள் சிந்திக்க வேண்டும்.

சரண் அடைந்த நக்சலைட்களுக்கு ரூ.1.80 கோடி நிதி உதவி வழங்கப்படும். உடனடி உதவியாக அனைவருக்கும் தலா ரூ.1 லட்சம் வழங்கப்படும். இதுவரை தெலங்கானாவில் 576 நக்சலைட்கள் சரண் அடைந்துள்ளனர். 17 பேர் மட்டுமே தலைமறைவாக உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.



# புதிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு எதிராக காங். சார்பில் ஜன.8 முதல் நாடு தழுவிய போராட்டம்

புதுடெல்லி, ஜன.5-

புதிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு எதிராக ஜனவரி 8ம் தேதி முதல் நாடு தழுவிய காங்கிரஸ் கட்சி நடத்தப்படும் என்று காங்கிரஸ் அறிவித்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் பெயர், விக்ஷித் பாரத் கேரன்ட்டி பார் ரோஜ்கர் அண்ட் அஜீவிகா மிஷன் (கிராமின்) (ஜி ராம் ஜி) என்று மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. இந்த புதிய ஊரக வேலை உறுதித் திட்ட மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. இதற்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் வழங்கினார்.

மகாத்மா காந்தி பெயரை நீக்கியதை கண்டித்தும், மசோதாவின் குறிப்பிட்ட அம்சங்களை எதிர்த்தும் காங்கிரஸ் போர்க்கொடி உயர்த்தி உள்ளது. இதுதொடர்பாக காங்கிரஸ் பொதுச்செயலாளர்கள் வேணுகோபால், ஜெய்ராம் ரமேஷ் ஆகியோர் டெல்லியில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது வேணுகோபால் கூறியதாவது:

காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக் காலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அமல் செய்யப்பட்டது. இந்த திட்டத்தால் வறுமை குறைந்தது. தொழிலாளர்களின் இடம்பெயர்வு குறைந்தது. புதிய கால்வாய்கள், அணைகள் கட்டப்பட்டன. கரோனா பெருந்தொற்று மற்றும் நெருக்கடியான காலங்களில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டம் மக்களின் பாதுகாவலனாக விளங்கியது.

காங்கிரஸ் கொண்டு வந்த இந்த திட்டத்துக்கு மாற்றாக ஜி ராம் ஜி என்ற புதிய திட்டத்தை பாஜக அரசு அமல்படுத்தி உள்ளது. புதிய திட்டத்தில் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. இந்த திட்டத்துக்கான நிதி முறையாக ஒதுக்கப்படவில்லை. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை மத்திய அரசு மறைமுகமாக அழித்து வருகிறது. இவ்வாறு வேணுகோபால் தெரிவித்தார்.

ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது: மத்திய அரசு 3 விவசாய சட்டங்களை கொண்டு வந்தது. விவசாயிகளின் போராட்டத்தால் அந்த 3 சட்டங்களும் வாபஸ் பெறப்பட்டன. தற்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு மாற்றாக ஜி ராம் ஜி திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தி உள்ளது. இதனால் ஒட்டுமொத்த நாடும் பாதிக்கப்படும். புதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பழைய திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் காக்கும் இயக்கம் என்ற பெயரில் காங்கிரஸ் சார்பில் ஜனவரி 8ம் தேதி நாடு தழுவிய போராட்டம் தொடங்கப்படும். இந்த போராட்டம் தொடர்ந்து 45 நாட்கள் நீடிக்கும். இது தேசிய இயக்கமாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தமிழகம் உட்பட 5 மாநிலங்களில் ரூ.10,000 கோடி சைபர் மோசடி

புதுடெல்லி, ஜன.5-

நாட்டில் நடைபெற்ற நிதி மோசடிகள் குறித்து தேசிய சைபர் குற்றம் இணைய தளத்தில் கூறியிருப்பதாவது:

நாட்டில் கடந்த 6 ஆண்டுகளில் நடைபெற்ற பல்வேறு மோசடிகள் மூலம் இந்தியர்கள் ரூ.52,976 கோடியை இழந்தனர். கவர்ச்சிகரமான முதலீட்டு திட்டம், டிஜிட்டல் கைது, ஆன்லைன் மோசடி, வங்கிகளின் பெயர்களில் நடந்த மோசடி, சைபர் குற்றங்கள் மூலம் இந்த மோசடிகள் நடைபெற்றன.

கடந்தாண்டில் மட்டும் ரூ.19,812 கோடியை இந்தியர்கள் இழந்தனர். கடந்த 2024ம் ஆண்டில் சுமார் ரூ.23 கோடி, 2023ல் ரூ.7 ஆயிரம் கோடி, 2002ல் ரூ.2 ஆயிரம் கோடி, 2021ல் ரூ.552 கோடி, 2020ல் ரூ.9 கோடியையும் இந்திய மக்கள் இழந்தனர்.

கடந்தாண்டில் மகாராஷ்டிராவில் சைபர் மோசடி புகார்கள் அதிகளவில் பதிவாயின. இங்கு ரூ.3,203 கோடியை மக்கள் இழந்துள்ளனர். அடுத்ததாக கர்நாடகா ரூ.2,413 கோடி, தமிழகம் ரூ.1,897 கோடி, உ.பி. ரூ.1,443 கோடி, தெலங்கானா ரூ.1,372 கோடி என மொத்தம் ரூ.10,000 கோடிக்கு மேல் இழந்துள்ளது.

நாட்டில் நடைபெற்ற மொத்த மோசடியில், இந்த 5 மாநிலங்களில்தான் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட மோசடிகள் நடைபெற்றுள்ளன. குஜராத் ரூ.1.312 கோடி, டெல்லி ரூ.1,163 கோடி, மேற்கு வங்கம் ரூ.1073 கோடியை இழந்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வங்கதேசத்தில் 3வது இந்து உயிரிழப்பு: சிறுபான்மையினர் மீது வன்முறை அதிகரிப்பு

டாக்கா, ஜன.5-

வங்கதேசத்தில் மர்ம கும்பல் தாக்கியதில் இந்து மதத்தை சேர்ந்த 3வது நபர் நேற்று உயிரிழந்தார்.

வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்க்கப்பட்டு, முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால நிர்வாகம் பொறுப்பேற்றது. அதன்பிறகு கடந்த மாதம் மாணவர்கள் மீண்டும் நடத்திய போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது. இதையடுத்து இந்துக்கள் மீதான தாக்குதல் தொடங்கியது. கடந்த மாதம் மட்டும் 2 இந்துக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது.

கடந்த டிசம்பர் 18ம் தேதி, வங்கதேசத்தின் மைமென்சிங் மாவட்டத்தில் வசித்த ஜவுளி ஆலை தொழிலாளி திபு சந்திர தாஸ் என்பவரை வன்முறை கும்பல் கடுமையாக தாக்கி கொன்றது. அதன்பின் அவரது உடலை மரத்தில் கட்டி எரித்தது. அதன்பின், கலிமோஹர் யூனியன் பகுதியிலில் ஹோசன்டங்கா கிராமத்தில் அம்ரித் மண்டல் என்பவரை வன்முறை கும்பல் கொன்றது.

இந்நிலையில், கோனேஷ்வர் யூனியன் டிலோய் கிராமத்தில் மருந்து கடை நடத்தி வந்த கோகன் தாஸ் என்பவரை கடந்த புதன்கிழமை இரவு மர்ம கும்பல் கூர்மையான ஆயுதங்களால் தாக்கியது. பின்னர் அவர் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்தது. இதையடுத்து பயங்கர அலறலுடன் கோகன் தாஸ், அருகில் இருந்த குளத்தில் குதித்தார்.


அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தின் ஓடிவந்தனர். அவர்களைப் பார்த்து மர்ம கும்பல் தப்பிவிட்டது. பின்னர் கோகன் தாஸை பொதுமக்கள் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த தாஸ் நேற்று பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து போலீஸார் கூறும்போது, "கடந்த புதன்கிழமை மருந்து கடையை மூடிவிட்டு கோகன் தாஸ் வீட்டுக்கு ஆட்டோவில் சென்றுள்ளார். அப்போது வழிமறித்து மர்ம கும்பல் தாக்கி உள்ளது. இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறோம்" என்றனர்.

# நள்ளிரவில் குடிபோதையில் திருப்பதி கோவிந்தராஜர் கோயில் கோபுரம் மீது ஏறிய நபர் கைது

திருப்பதி, ஜன.5-

திருப்பதி கோவிந்தராஜர் கோயிலின் முகப்பு கோபுரம் மீது குடிபோதையில் ஏறிய நபரை போலீஸார் மற்றும் தீயணைப்பு படையினர் சுமார் 3 மணி நேரம் போராடி கீழே இறக்கினர். ஆந்திராவின் ஆன்மிக நகரமான திருப்பதியின் மையப்பகுதியில் பிரசித்தி பெற்ற கோவிந்தராஜர் திருக்கோயில் அமைந்துள்ளது. சுமார் 50 அடி உயர ராஜ கோபுரமும், மிகப்பெரிய மதில் சுவர்களும் கொண்ட திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் முக்கிய கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.



இந்நிலையில், இக்கோயிலில் நேற்று முன்தினம் இரவு ஏகாந்த சேவைக்கு பிறகு பக்தர்கள் அனைவரும் கோயிலை விட்டு வெளியே சென்றதும் நடை அடைக்கப்பட்டது. சிறிது நேரத்தில் சுமார் 50 அடி உயர முகப்பு கோபுரத்தின் மீது ஒரு நபர் இருப்பதை அங்கிருந்தவர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அந்த நபரை கீழே இறங்கி வருமாறு பாதுகாப்பு பணியில் இருந்தவர்கள் வலியுறுத்தினர். ஆனால் அவர் அதை கேட்கவில்லை.

பிறகு போலீஸார், தேவஸ்தான விஜிலென்ஸ் அதிகாரிகள், தீயணைப்பு படையினர் என பலரும் ஒன்றுகூடி அவரை அழைத்தபோதும் அவர் கீழே வர மறுத்து விட்டார். மேலும் அந்த நபர் அங்கிருந்த கலசங்களை சேதப்படுத்த தொடங்கினார். இதையடுத்து தீயணைப்பு படையினர் கோபுரத்தின் மேலே சென்று கயிற்றை கட்டி அதன் மூலம் அந்த நபரை கீழே கொண்டு வந்தனர். பின்னர் போலீஸார் நடத்திய விசாரணையில், அந்த நபர் தெலங்கானா மாநிலம், நிஜாமாபாத் மாவட்டம், பெத்தமல்லா ரெட்டி காலனியை சேர்ந்த திருப்பதி என்பதும் மது போதையில் கோபுரம் மீது ஏறியதும் தெரியவந்தது. அவரை போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.கோவிந்தராஜ பெருமாள் கோயிலில் தேவஸ்தான விஜிலென்ஸ் அதிகாரிகள் மற்றும் போலீஸார் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் பாதுகாப்பு குறைபாடு தொடர்பாக தேஸ்தான முன்னாள் அறங்காவலர் குழு தலைவரும் திருப்பதி முன்னாள் எம்எல்ஏவுமான கருணாகர் ரெட்டி கேள்வி எழுப்பியுள்ளார்.



■ திருப்பூர் திருமுருகன்பூண்டியில் வீடு தேடி ரேஷன் பொருட்கள் வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ், 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாக ரேஷன் பொருட்கள், திருமுருகன்பூண்டி நியாய விலை கடையில் இருந்து வினியோகம் செய்யப்பட்டது

# தாம்பாளத்தட்டில் புடவை, இனிப்புகள், மற்றும் பரிசுப் பொருட்கள்

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மார்க்கெட் சக்திவேல் 3000 பேருக்கு பரிசு பொருட்கள் வழங்கினார்

சின்னாளபட்டி, ஜன 05-

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மார்க்கெட்; சக்திவேல் குடும்பத்தினரின் சார்பாக 3000 பேருக்கு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. தாம்பாளத்தட்டில் புடவை, இனிப்புகள், மற்றும் அன்னதானத்துடன் பரிசுப் பொருட்கள் வழங்கப் பட்டது.







திண்டுக்கல் மாகராட்சி முன்னாள் மாமன்ற உறுப்பினர் மார்கெட் சச்திவேல், இவர் அமைச்சர் ஐ.பெரியசாமி மீது அலாதி பற்று உள்ளவர். ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகராட்சி 8 மற்றும் 9வது வார்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்குவதை தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார். வரும் ஜனவரி 6ம் தேதி அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பிறந்தநாள் விழா நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு திண்டுக்கல் மாநகராட்சி 8 மற்றும் 9வது வார்டுக்குட்பட்ட நாயக்கர் புதுத்தெரு 4 தெருக்கள், காளிமுத்துப்பிள்ளை சந்து, ராமசாமிபுரம், மேற்கு கோவிந்தாபுரம் பகுதியைச் சேர்ந்த சொசைட்டி தெரு உட்பட அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தூய்மை பணியாளார்கள், கூலித்தொழிலாளிகள் உட்பட அனைவருக்கும் முன்னாள் மாமன்ற உறுப்பினர் மார்கெட் சக்திவேல் அமுதவள்ளி சக்திவேல், மற்றும் அரவிந்குமார், சோனியாதேவி சார்பாக தாம்பாளத்தட்டில் புடவை, இனிப்புகள் மற்றும் உணவுகளுடன் பரிசுப்பொருட்கள் 3 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டது. நீண்ட வரிசையில் காத்திருந்து, பரிசுப் பொருட்களை பெற்றுக் கொண்ட பொதுமக்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நீடுழி வாழ வேண்டும் என வாழ்த்தினார்கள். இது குறித்து மார்க்கெட் சக்திவேல் கூறுகையில் தென்பாண்டி சிங்கம் என்றால், எங்கள் ஐயா ஐ.பி.யார்தான் என்பது அனைவருக்கும் தெரியும். அந்த அளவிற்கு மனித நேயத்துடன் அனைவருக்கும் வாரிவழங்கும் வள்ளலாக ஐ.பி. ஐயா உள்ளார். அவரது பிறந்தநாளை முன்னிட்டு எங்கள் குடும்பத்தினரின் சார்பாக 3000 பேருக்கு பரிசுப் பொருட்களை வழங்கி வருகிறோம் என்றார். நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் ஆனந்தன், பகுதி துணைச் செயலர் சதீஸ்குமார், நாகபாண்டி, பிரதிநிதி மணிகண்டன், சிம்பு,ஸ்டிக்கர் பாண்டி, செந்தில்குமார், பாலகிருஷ்ணன், முத்துகிருஷ்ணன், சேகர், ராமமூர்த்தி, வாசு, மகளிர் அணியைச் சேர்ந்த ஹேமா, கிருஷ்ணவேணி, ஜெயலெட்சுமி உட்பட திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# துறையூர் அருகே கரும்பு விவசாயிகள் கண்ணீர்

## கரும்பு கொள்முதல் தாமதம் ஏக்கருக்கு ரூ.1.5 லட்சம் நஷ்டம் ஏற்படும் என புகார்

திருச்சி, ஜன.5-

திருச்சி மாவட்டம் துறையூர் அடுத்துள்ள பொன்னுசங்கம்பட்டி பகுதியில், விவசாயிகள் சுமார் 20 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவில் செங்கரும்பு பயிரிட்டுள்ளனர்.

தமிழக அரசு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் பொங்கல் தொகுப்பில் கரும்பு சேர்க்கப்பட்டு வந்தது. இதற்காக, இப்பகுதி விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு சங்கங்கள் மூலம் கரும்பு கொள்முதல் செய்யப்பட்டு வந்தது.

கடந்த ஆண்டுகளில் டிசம்பர் 15ஆம் தேதிக்குள் கரும்பு கொள்முதல் செய்ய விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு கடந்த 10 நாட்களுக்கு மேலாக விவசாயிகளின் பெயர் பட்டியலை அரசு பெற்றிருந்தும், இதுவரை எந்த கொள்முதல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

வரும் 8 ஆம் தேதி முதல் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொங்கல் தொகுப்பு அரசு வழங்கப்பட உள்ள நிலையில், கால அவகாசம் மிகக் குறைவாக இருப்பதால் கரும்பு விவசாயிகள் பெரும் குழப்பத்திலும் கவலையிலும் ஆழ்ந்துள்ளனர்.

கரும்பு கொள்முதல் தாமதமானால், ஏக்கருக்கு ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படும் என தெரிவித்த விவசாயிகள், தமிழக அரசு உடனடியாக கரும்பை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

# பொங்கல் தொகுப்பு நிதியாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.5,000 வழங்க வேண்டும் : புதுச்சேரி அதிமுக

புதுச்சேரி, ஜன.5-

"பொங்கல் தொகுப்பு நிதியாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும். புதுவையில் தூய்மை பணியில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக ரூ.13 ஆயிரம் வழங்க வேண்டும்" என அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் வலியுறுத்தியுள்ளார்.



புதுச்சேரி அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: போலி மருந்து விற்றதற்காக விற்பனையை நிறுத்த உத்தரவிடப்பட்ட கடைகளில் விற்பனை நடக்கிறதா என சோதனை செய்ய வேண்டும். புதுச்சேரி மாநிலத்திலுள்ள அனைத்து மருத்துவ கல்லூரிகளிலும் விநியோகிக்கப்படும் மருந்து தரமாக உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

அதேபோல் மருத்துவமனைகளில் விநியோகிக்கப்படும் மருந்துகள் மற்றும் ஆப்ரேஷன் தியேட்டரில் பயன்படுத்தப்படும் பொருட்கள் தரமானதா என்பதனை அறிய வேண்டும். இதய நோயாளிகளுக்கு வைக்கப்படும் ஸ்டெண்ட் தரமானதா என்பதனை இதுவரை சுகாதாரத்துறை ஆய்வு செய்யவில்லை, குறைந்த பட்சம் பத்தாயிரம் முதல் ஐந்து லட்ச ரூபாய் வரை ஸ்டெண்ட் கிடைக்கிறது. அப்படி வைக்கப்பட்ட ஸ்டெண்ட் தரமானதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

சுகாதாரத்துறை ஒரு குழு அமைத்து மருத்துவமனைகளில் இருக்கும் மருந்துகளின் தரத்தை கண்டறிய வேண்டும். கலால் துறையில் பறக்கும் படைகள் உள்ளது போன்று மருத்துவத் துறையிலும் அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை கொண்டு குழு அமைக்க வேண்டும்.

புதுச்சேரியில் இருந்து இலங்கைக்கு போலி மருந்துகள் கடத்தப்படுவதாக முன்னாள் முதல்வர் நாராயணசாமி கூறுகிறார். அப்படி என்றால் அதற்கான ஆதாரங்கள் அவர் வைத்திருப்பார். எனவே சிபிஐ மற்றும் என்ஐஏ அதிகாரிகள் ஆதாரங்களை கேட்டு பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொங்கல் தொகுப்பு நிதியாக குடும்பம் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும். புதுவையில் தூய்மை பணியில் ஈடுபடுத்தப்படும் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளமாக ரூ.13 ஆயிரம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திண்டுக்கல்லில் சேவல் கண்காட்சி: கவனம் ஈர்த்த ரூ.3 லட்சம் மதிப்பிலான சேவல்

திண்டுக்கல், ஜன.5-

திண்டுக்கல்லில் நடந்த கிளிமூக்கு விசிறிவால் சேவல் கண்காட்சியில் ரூ.3 லட்சம் மதிப்பிலான சேவல் அனைவரையும் கவர்ந்தது.

திண்டுக்கல் அசில் ஆர்கனைசேஷன், உலக அசில் ஆர்கனைசேஷன், அனைத்திந்திய சேவல் வளர்ப்பு நண்பர்கள் சார்பில் 11 வது ஆண்டாக கிளிமூக்கு விசிறிவால் சேவல் கண்காட்சி திண்டுக்கல்லில் நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி கேரளா, அந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தும் சேவல்கள் கலந்துகொண்டன.

கண்காட்சியில் கீரி, மயில், எண்ணெய்கருப்பு, கொக்குவெள்ளை, காகம் என பல்வேறு வகையான கிளிமூக்கு விசிறிவால் சேவல்கள் இடம்பெற்றன. சிறந்த சேவல்களுக்கு டிவி, பிரிட்ஜ், மிக்சி உள்ளிட்ட பொருட்கள் பரிசுகளாக வழங்கப்பட்டன.

திருச்சி மாவட்டம் மணப்பாறையில் இருந்து ரூ.3 லட்சம் மதிப்பிலான சேவலை ரங்கராஜன் என்பவர் கண்காட்சிக்கு கொண்டுவந்திருந்தார். விலைக்கு சிலர் கேட்டபோதும் அதை அவர் விற்க மறுத்துவிட்டார். இதேபோல் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.3 லட்சம் வரையிலான சேவல்கள் கண்காட்சியில் இடம்பெற்றன.

சேவல் கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர் நெல்சன் கூறுகையில், "நாட்டு இன கிளிமூக்கு விசிறிவால் சேவல் இனங்கள் அழியும் தருவாயில் இருப்பதால் அவற்றை காக்கவே இதுபோன்ற கண்காட்சிகளை நடத்தி அவற்றை பாதுகாத்துவருகிறோம்.

இன்றைய கண்காட்சியில் 320 சேவல்கள் இடம் பெற்றன. சிறந்த சேவல்களை அவற்றின் மூக்கு அமைப்பு, வால் அமைப்பு, கொண்டை அமைப்பு ஆகியவற்றை கொண்டு தேர்வு செய்கிறோம். சிறந்த சேவல்களுக்கு டிவி, பிரிட்ஜ் உள்ளிட்ட பரிசுகளையும் வழங்குகிறோம்" என தெரிவித்தார்.

# இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம்

தென்காசி, ஜன.5-

தென்காசி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 பணிகள் நடைபெற்று வருகிறது. அதன்படி 19.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மேற்படி வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கவும் தகுதியில்லாத வாக்காளர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில்



இடம்பெற்றிருந்தால் அவர்களை கண்டறிந்து நீக்கவும் 19.12.2025 முதல் 08.01.2026 வரையிலான காலகட்டத்தில் ஆட்சேபனைகள் தெரிவிக்கலாம் என்று அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. சிறப்பு முகாம்களுக்கும் அனைத்து கட்சியினரும் தங்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.



■ மதுரை அலங்காநல்லூரில் உலக புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு வரும் 17ஆம் தேதி நடைபெற உள்ளது. வாடிவாசல் மற்றும் காளைகள் நிற்கும் இடங்கள் முக்கிய பிரமுகர்கள் அமருமிடம் ஆகியவற்றை காவல்துறை ஏ.டி.ஜி.பி.மகேஸ்வர் தயாள், கமிஷனர் லோகநாதன், டி.ஐ.ஜி.அபிநவ்குமார், எஸ்.பி.அரவிந்த் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அருகில் அலங்காநல்லூர் காவல் நிலைய ஆய்வாளர் பிரகாஷ் மற்றும் காவலர்கள் உள்ளனர்.

# எங்களின் சகோதரனாய் பொங்கல் பரிசு வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு என்றும் உறுதுணையாய் இருப்போம் கைத்தறி நெசவாளர்கள் உறுதி

சின்னாளபட்டி ஜன.5-

ஆத்தூர் தொகுதி மக்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் பொங்கல் பரிசு விநியோகம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சின்னாளபட்டியில் போட்டி போட்டுக்கொண்டு அமைச்சர் சார்பாக வழங்கப்பட்ட பாத்திரங்களை பொதுமக்கள் வாங்கிச் சென்றதோடு எங்களின் சகோதரனாய் பொங்கல் பரிசு வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு என்றும் உறுதுணையாய் இருப்போம் என்றனர்.





திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை தொகுதி மக்களோடு மக்களாக பழகிவருவதால் அவரை தொகுதி மக்கள் அவரது பெயரை உச்சரிக்காமல் ஐ.பி. என்று செல்லமாக அழைப்பதுடன் தென்பாண்டி சிங்கம் என அனைத்து இடங்களிலும் சொல்வார்கள். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தொகுதி மக்களுக்கு தீபாவளி அன்பளிப்பு, பொங்கல் அன்பளிப்பு வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார். இவ்வருடம் திமுகவின்; 75 வது ஆண்டுவிழா, துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்தநாள் விழா, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தொகுதி மக்களுக்கு எவர்சில்வர் பாத்திரம் (சம்படம்) வழங்கி வருகிறார். இதற்கு தொகுதி மக்கள் மத்தியில் குறிப்பாக பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சின்னாளபட்டி பேரூராட்சிக்குட்பட்ட 17வது வார்டு பொன்னன் நகர், காமாட்சி நகர், கலைஞர் காலனி பொதுமக்களுக்கு அப்பகுதியில் உள்ள பூங்காவில் பாத்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், முன்னாள் பொருளாளர் எஸ்.ஆர். முருகன், வார்டு உறுப்பினர் ரவிக்குமார், பேரூர் பொறுப்புகுழு உறுப்பினர்கள் கிருஷ்ணன், கீர்த்தனா, முன்னாள் வார்டு உறுப்பினர் ஜனதா காலனி இராமகிருஷ்ணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். வார்டு செயலாளர் காஜாமைதீன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் அமைச்சர் தொகுதி மக்களுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சார்பாக வழங்கப்பட்ட மூடியுடன் கூடிய சம்படம் பாத்திரம் மற்றும் இனிப்புகளுடன் வழங்கினார்கள். பாத்திரங்களை பெற்ற பெண்கள் மற்றும் கைத்தறி நெசவாளர் பெண்கள் ஐ.பி. ஐயா எங்களுக்கு பொங்கல் பரிசு வழங்கியுள்ளார். அண்ணன் எங்களுக்கு பொங்கல் பரிசு வழங்கியுள்ளார் என பெருமிதமாக சொன்னார்கள்.

ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி அய்யா அவர்கள் பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல் உட்பட விஷேச நாட்களில் அன்பளிப்பு வழங்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அவருக்கு நாங்கள் என்றும் உறுதுணையாக இருப்போம் என்றனர். நிகழ்ச்சியில் ஆத்தூர் ஒன்றிய மாணவரணி அணி அமைப்பாளர் அரவிந்தன், இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஸ், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், துணை அமைப்பாளர் ரவி, மற்றும் திமுக நிர்வாகிகள் ஹிந்தி பண்டிட் முருகன், மல்லையன், சில்லி முருகன், ஆஷா மல்லையா, 18வது வார்டு செயலாளர்; ஆனந்த் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000